1969 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: ஒன்று மட்டும்தான் நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டது. பத்து கோரிக்கைகளை விடவேண்டும் என்று தொழிலாளர்கள் மனு தந்திருக்கிறார்கள். அது சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, மாநில சர்க்கார் செய்யும் சிபார்சுகளை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால்தான், இப்படிப்பட்ட போராட்டம் நடைபெறுகிறது என்பதை அரசாங்கம் உணர்கிறதா? ஆம் என்றால், மாநில அரசாங்கத்தின் சிபார்சுகளை இனியாவது மத்திய அரசு ஏற்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பல முறை பேசப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இந்த அரசினால் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. கடைசியில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரக்கூடிய சமயத்தில், நிர்வாகத்தினரும் ஊக்கம் கொண்டு, தொழிலாளர்கள் தலைவர்களும் ஊக்கம் கொண்டு, பேச்சு வார்த்தைகள் நல்ல விதமாக ஆரம்பிக்கப்பட்டபொழுது, திடீரென்று நிர்வாகத்தினர் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து 'இந்தப் பேச்சுவார்த்தைகளை நீங்கள் மேற்கொண்டு தொடரவேண்டாம்' என்று ஒரு தந்தி வந்திருப்பதாகச் சொல்லி, அந்தத் தந்தியை அவர்கள் அண்ணா அவர்களிடம் காட்டினார்கள். பேச்சு வார்த்தை தடைப்பட்டதால், அதற்குப் பின்னால் வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னால் மீண்டும் தலையிட்டு சமரசம் செய்வதற்கு முயற்சி செய்கிறோம். மத்திய அரசின் தனி நிறுவனம் இது. நமது அரசாங்கம் இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்டின் கீழ் அவர்களையும் ஒரு நிர்வாகத்தினர் என்று எடுத்துக்கொண்டு, சமரசம் செய்துவைப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தேவஸ்தான எக்சிகியூடிவ் அதிகாரிகளுக்குப் பயணப்படி

*49 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவஸ்தானங்களில் எக்சிகியூடிவ் ஆபீசர்களாகப் (Executive Officers) பணிபுரிபவர்களுக்கு T.A. கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லை எனில், காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, இந்தப் படி கொடுக்கப்படுகிறது என்றால், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: எம்.டி.ஏ. ரூல்களின்படி டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அது, கிரேடையும், சம்பளத்தையும் பொறுத்தது.

திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான்: தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுக்கோட்டையில் தேவஸ்தான ஊழியர்கள் மகாநாடு நடந்தது. அவர்கள் சில கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அரசாங்கத்திற்கு அந்த 'ரெப்ரஸென்டேஷன்' இன்னும் வந்து சேரவில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, தேவஸ் தானங்களில் பணிபுரியும் எக்சிகியூடிவ் ஆபீஸர்களின் எண் ணிக்கை தற்பொழுது எவ்வளவு? அவர்களில் தாழ்த்தப்பட்ட வர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தனிக் கேள்வி போட வேண்டும்.

Ennore Thermal Scheme

* 50 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Ennore Thermal Scheme is being undertaken by Madras Electricity Board near Madras City; and

(*b*) if so, how does this scheme propose to dispose of the fly ash?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நாள் ஒன்றுக்கு

முற்பகல் 10-00 சுமார் 1200-1700 டன் அளவுள்ள சாம்பல் கிடைக்கிறது. மாநில வீட்டு வசதி வாரியம் நிறுவவிருக்கிற புழை கற்கலவைத் தொழிற் சாலையில் (Cellular Concrete Factory) பயன்படுத்துவதற்காக இதில் அன்றாடம் சுமார் 300 முதல் 400 டன் வரை சாம்பல் வழங்கவேண்டுமென்று அவ்வாரியம் கேட்டுள்ளது. எஞ்சிய சாம்பலை தாழ்ந்த பகுதிகளில் ஓரளவும் கடலில் ஓரளவு மாகக் கொட்டிவிடக் கருதப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM: Is not this fly ash which emanates from this Ennore Thermal Station injurious to the public health and was any representation received from the neighbouring people about this and if so, what action is being taken to prevent this kind of fly ash interfering with the public health of the people?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பல்வேறு அதிகாரிகளையும் கலந்தாலோசித்துத்தான் அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு அமுலாக்கப்படுகிறது.